**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | | | |
|---|---|---|---|
| **SESSIONS** | **45** | **of** | **2022** |

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | Prosecution | PW | 1 |

| | |
|---|---|
| பெயர் | சீனிவாசன் |
| தந்தை பெயர் | பாலகிருஷ்ணன் |
| கிராமம் | காஞ்சிபுரம் |
| தொழில் | ஓய்வு |
| வயது | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17 th day of August 2026

நாள்:17.08..2026 – அ.சா. (எதிரி இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)

**முதல் விசாரணை**

நான் தற்போது காஞ்சிபுரத்தில் வசிக்கிறேன். நான் இதற்கு முன் செக்ரேட்டியரில் இருந்து பின்பு விருப்ப ஓய்வில் வந்து விட்டேன். இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் 2,3 எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 23.12.2021 அன்று காஞ்சிபுரத்தில் உள்ள எங்கள் வீட்டில் நகை பணம் திருடு போனது. நகை 30 பவுனும், பணம் ரூபாய் 1,00,000 திருடு போனது. தாலுக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னடையது தான். அந்த **புகார் அ த சா ஆ 1 ஆகும்.** 3 நாட்களில் போலீசார் நகையை மீட்டு கொடுத்தார்கள். பணத்தையும் மீட்டு விட்டார்கள். ஆரம் ஒன்று, கல் வைத்த வளையல் இரண்டு, நார்மல் வளையல் நான்கு, ஒரு பிரேஸ்லட் கோல்டு வாட்ச், கோல்ட் காய்ன்ஸ், ஒரு சாவிக்கொத்து ஆக மொத்தம் 43 சவரன் ஆகும். அதை திரும்ப பெற்று கொண்டேன். பணத்தையும் பெற்று கொண்டேன். போலீசார் 3 நாட்கள் கழித்து காவல் நிலையம் அழைத்தார்கள். நகையை காண்பித்தார்கள். என்னுடைய நகை தான். இரண்டு பேர் திருடியதாக போலீசார் சொன்னார்கள். தற்சமயம் என்னால் ஆஜர் எதிரிகள் தானா என்று அடையாளம் சொல்ல முடியவில்லை. என்னிடம்

காட்டப்படும் வண்ண புகைப்படத்தில் உள்ள பணம் நான் பெற்று கொண்டேன். **அந்த வண்ண புகைப்படங்கள் அ.த.சா.ஆ 2 ஆகும். (குற்றவியல் நீதிமன்றம் எண் – 2 ன் PI No 5/2022 06.01.2022)** போலீசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி நகைகள் என்னுடைய மனைவியுடைது தான். அதை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்– 2 நீதிமன்றத்தில் தாக்கல் செய்து திரும்ப பெற்று கொண்டேன். **(மேற்படி நகைகள் பொறுத்து எடுக்கப்பட்ட வண்ண புகைப்படம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்– 2 லிருந்து பெறப்படவில்லை. )**

**குறுக்கு விசாரணை**

**(மேற்படி ஆவணம் தாக்கல் செய்வதற்காக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மற்ற சாட்சிகள் இன்றைய தினம் ஆஜர் என்றாலும் மேற்படி புகைப்படம் பொருத்து ஒரு தெளிவில்லாத சூழலில் விசாரணை இத்துடன் நிறுத்தி வைக்கப்பட்டது.)**

Sd/-S.Nagarajan,
Principal District Judge,
Kancheepuram.